# இதயம் மகிழ்ந்து இறையுன் பாதம்

இதயம் மகிழ்ந்து இறையுன் பாதம் காணிக்கை ஏந்தி வந்தோம்
இறையன்பினில் மலர்ந்த அருட்குடும்பம் - உன்
உறவினில் இணைய வந்தோம்

1
கருணையில் விளைந்த  கல்வாரிப் பலியில் - எம்
கறைகள் நீங்கியதால் குருகுலமாகப் பலி நிறைவேற்ற
புனிதராய்த் தகுதியுற்றோம்
இலட்சியப் பாதையிலே - உம் இறையரசும் மலர
தினமும் உழைத்திடவே எம் வாழ்வை உவந்தளித்தோம்

2
உயர்வும் தாழ்வும் துயரும் மகிழ்வும் இணைந்த எம் புவி வாழ்வில்
உம் திருவுளம் பணிந்து அருள்நெறி நடந்து
வாழ்பவர் குருகுலமே
அன்பின் உறவினிலே யாம் அவனியை உருவாக்க
அhப்பணப் பலியாக எம்மை சமர்ப்பணம் செய்கின்றோம்